TNVP350001252025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்**

**முன்னிலை. திரு. D.பொன்வேந்தன்., பி.டெக், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, வானூர்**

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிகிழமை.

**(2057- திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 15-ம் நாள் வெள்ளிகிழமை)**

**அ.வ.எண். 29/2020**

**CNR NO:- TNVP350001252025**

K.ராஜேந்திரன், த/பெ.கண்ணன். ... வாதி

**/எதிர்/-**

**1.** ராதா (எ) ராதாதேவி.

**2.** ஜெயபுரீ

**3.** மோனிஷா.

**4.** உமா. ... பிரதிவாதிகள்.

இவ்வழக்கானது 28.07.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.புகழேந்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்



PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:19 +0530

**தீர்ப்புரை**

**1.** வாதிக்கும் 1-ம் பிரதிவாதியின் கணவரான காலஞ்சென்ற சுப்ரமணியத்துக்கும் கடந்த 21.04.2010-ல் ஏற்பட்ட வாய்மொழி கிரைய உடன்படிக்கை படி 1 முதல் 3 பிரதிவாதிகள் சுப்ரமணியத்தின் வாரிசுகள் என்ற முறையில் ஏற்றது ஆற்றுக விதி (Specific Performance) கொள்கையின் படி வழக்கு சொத்தை வாதியின் பேரில் பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து கிரையம் எழுதி பதிவு செய்து கொடுக்க கோரியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்க தவறும் பட்சத்தில் இந்நீதிமன்றமே 1 முதல் 3 பிரதிவாதிகள் சார்பில் வழக்கு சொத்தை வாதிக்கு கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்கவேண்டியும், வழக்கு சொத்தை ஒப்புதல் கொடுக்க கோரியும், வாதி வழக்கு சொத்தை அனுபவிப்பதை 4-ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யா வண்ணம் 4-ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்து சம்மந்தமாக 4-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள வானூர் சார்பதிவக ஆவண எண்.6313/2019 கிரைய ஆவணமானது இல்லா நிலையது என விளம்புகை செய்யக் கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரை சுருக்கம்** :-

**2.1)** காலஞ்சென்ற கண்ணன் என்பவர் வாதியின் தந்தை என்றும், 1-ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியன் என்பவர் வாதியின் தந்தை கண்ணனுக்கு சொந்த அண்ணன் மகன் என்றும், வாதியின் தந்தை கண்ணனின் அண்ணன்



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:29 +0530

வெகுகாலத்திற்கு முன்பு இறந்துவிட்டபடியால் வாதியின் தந்தை கண்ணன் என்பவர் அவரது அண்ணன் மகனான சுப்ரமணித்துக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றும், மேற்படி சுப்ரமணியன் பேரில் கொண்டிருந்த பாசத்தின் காரணமாகவும், கஷ்டமான குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும் வாதியின் தந்தை வழக்கு சொத்தை தன் சொந்த பணத்தை கொண்டு 1-ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியத்துக்கு ஓர் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கடந்த 19.05.1998-ல் வழக்கு சொத்தை கிரையம் வாங்கி வைத்தார் என்றும், 1-ம் பிரதிவாதியும் அவருடைய கணவரும் நிரந்தரமாக சென்னையில் தங்கி வசித்து வந்ததால் கிரையம் பெற்ற வழக்கு சொத்தை வாதியின் தந்தை கண்ணன் பராமரித்து பாதுகாத்து வரும்பொருட்டு 1-ம் பிரதிவாதியால் வாதியின் தந்தை கண்ணனிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கு சொத்திற்கு அருகில் வாதியின் குடும்பத்திற்கு பாத்தியமும் அனுபவமுமான சொத்து இருந்தது என்றும், வழக்கு சொத்து வாதியின் தந்தையின் அனுபவத்தில் இருந்து வந்து சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வாதியின் தந்தை கண்ணன் காலமாகிவிட்டதால் அதன்பிறகு வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் நாளது வரையில் இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** வாதியின் தந்தை கண்ணனின் அண்ணன் மகனும், 1-ம் பிரதிவாதியின் கணவருமான சுப்ரமணியத்துக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவ சிகிச்சைக்கு பணம் தேவைப்பட்டதால் வாதியின் பராமரிப்பிலும், அனுபவத்திலும் இருந்து வந்த வழக்கு சொத்தை கிரையம் வாங்கிக் கொள்ளும்படி 1-ம்



PONVENTHAN D Digitally signed by PONVENTHAN D Date: 2026.07.31 17:59:33 +0530

பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியன் 21.04.2010-ல் நேரில் சந்தித்து கேட்டார் என்றும், வாதியானவர் சம்மதித்து மேற்படி தேதியிலேயே வழக்கு சொத்து ரூ.60,000/- என வாய்மொழியாக கிரையம் பேசி முடிக்கப்பட்டு அன்றைய தேதியிலேயே 1-ம் பிரதிவாதியும், அவரது கணவரும் ரூ.50,000/- பணத்தை கிரைய முன்பணமாக உறவினர்கள் முன்னிலையில் வாங்கிக்கொண்டார்கள் என்றும், வாதிக்கு மேற்படி சுப்ரமணியன் என்பவரும் அவருடைய மனைவி 1-ம் பிரதிவாதியும் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், அவர்கள் மீதிருந்த நல்ல எண்ணம் மற்றும் நம்பிக்கையின் காரணமாகவும், வழக்கு சொத்தில் ஏற்கனவே வாதி அனுபவத்தில் இருந்து வந்ததாலும், 1-ம் பிரதிவாதியின் கணவர் மருத்துவமனைக்கு சென்று தொடர் சிகிச்சையில் இருக்கவேண்டி இருந்ததாலும், உடனடியாக கிரைய உடன்படிக்கை எழுதப்படவில்லையென்றும், இந்நிலையில் 1-ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியன் கடந்த 02.05.2010-ல் சென்னையில் காலமாகிவிட்டார் என்றும், காலஞ்சென்ற சுப்ரமணியத்திற்கு 1-ம் பிரதிவாதி மனைவி என்றும், 2, 3 பிரதிவாதிகள் மகள்கள் என்றும், வாதியானவர் 1 முதல் 3 பிரதிவாதிகளை சந்தித்து வாய்மொழி கிரைய உடன்படிக்கைப்படி கிரையம் செய்து கொடுக்கும் படி பலமுறை கேட்டார் என்றும், அதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதியின் வாரிசு சான்றிதழ் கிடைத்தவுடன் கிரையம் செய்து கொடுப்பதாக சொல்லிவிட்டார்கள் என்றும், இறுதியாக 20.05.2015-ல் வாதியானவர் 1 முதல் 3 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து கிரைய உடன்படிக்கை குறித்து கேட்டபொழுது வாரிசு சான்றிதழ் தயாராகிவிட்டது என்றும், அதை பெறுவதற்கு மீதி கிரைய தொகையான ரூ.10,000/- பணத்தை கொடுக்குமாறு வாதியிடம் கேட்டார்கள் என்றும், அதன் பேரில் 01.06.2015-ல் சென்னையில் மேற்படி



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:37 +0530

வாதியிடம் 1-ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகள் முன்னிலையில் வீட்டில் வைத்து ரூ.10,000/- பணத்தை பெற்றுக்கொண்டு வாரிசு சான்றிதழ் பெற்றவுடன் வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக உறுதியளித்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

**2.3)** வாய்மொழி உடன்படிக்கையை அனுசரித்து 1-ம் பிரதிவாதியிடம் வாதி வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுப்பது குறித்து அடிக்கடி கேட்டு வந்தார் என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் பெற்ற பிறகும் கூட வாரிசு சான்றிதழ் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டு சுமார் 3 வருடத்திற்கு மேல் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், இந்நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் கிடைத்து விட்டதாக வாதிக்கு தகவல் வந்தது என்றும், அதுகுறித்து விசாரணை செய்தபொழுது தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுக்க முயற்சி செய்து வந்தது வாதிக்கு தெரியவந்தது என்றும், வாதி வழக்கு சொத்தை பொறுத்து ஏற்பட்ட வாய்மொழி உடன்படிக்கை குறித்தும், வாதி வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்து அதில் கூரை வீடு கட்டிக்கொண்டு அதற்கு உரிய வீட்டு வரியை செலுத்தி வருவதையும், அதனால் 1 -ம் பிரதிவாதியும், 4-ம் பிரதிவாதியும் தங்களுக்கு இடையில் வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித பராதீனமும் செய்து கொள்ள கூடாது என்று 26.11.2019-ல் 1-ம் பிரதிவாதிக்கும், 4-ம் பிரதிவாதிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக சொல்லப்பட்டுள்ளது.

**2.4)** கடந்த 20.02.2020-ம் தேதியன்று 4-ம் பிரதிவாதியும் அவரது கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்களும் வழக்கு சொத்தில் தப்பு பாத்தியம்



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:40 +0530

கொண்டாடிக்கொண்டு அடியாட்களுடன் வந்து சட்டத்திற்கு புறம்பாக வாதியை வழக்கு சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சித்தார்கள் என்றும், அதனை வாதியும் அவரது உறவினர்களும் சேர்ந்து முறியடித்துவிட்டார்கள் என்றும், பின்னிட்டு 4-ம் பிரதிவாதி வாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அப்போது காவல்துறையினர் விசாரித்த போதுதான் 1-ம் பிரதிவாதியும் அவரது இரு குமாரத்திகளும் சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை பொறுத்து 18.12.2019-ல் கிரையம் கொடுத்துள்ளது தெரியவந்தது என்று சொல்லப்பட்டுள்ளது.

**2.5)** வாதி வழக்கு சொத்தில் கூரை வீடு கட்டிக்கொண்டு அதற்கான வீட்டு வரியை கடந்த 2016 முதல் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு செலுத்தி வந்துள்ளார் என்றும், 4-ம் பிரதிவாதி 18.12.2019-ல் வழக்கு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டுவிட்டது என்றும், மேலும், 1 மற்றும் 4-ம் பிரதிவாதிக்கு 26.11.2019-ம் தேதியிலேயே வழக்கறிஞர் அறிவிப்பை வாதி அனுப்பியுள்ளார் என்றும், அதனை பெற்றுக்கொண்டு விவரங்களை அறிந்த பிறகே 18.12.2019-ல் வழக்கு சொத்தை 4-ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றும், மேற்படி கிரையமானது சட்டப்படி செல்லாது என்றும், வழக்கு சொத்தை கிரையம் வாங்குவதற்கான முன்னுரிமை வாதிக்கு தான் உள்ளது என்றும், எனவே, 4-ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள ஆவண எண்.6313/2019 கிரைய ஆவணமானது சட்டப்படி செல்லாது என்றும், அது இல்லா நிலையது என அறிவிக்க வேண்டிய ஆவணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:44 +0530

**2.6)** வழக்கு சொத்து சம்மந்தமாக 4-ம் பிரதிவாதியின் பேரில் 18.12.2019-ம் தேதியில் ஏற்பட்டிருக்கும் கிரையப்பத்திரத்தை ரத்து செய்து உத்தரவு செய்வதால் 4-ம் பிரதிவாதிக்கு மேற்படி கிரையத்தின் வாயிலாக ஏற்படும் கிரையத் தொகை இழப்பான ரூ.97,000/- பணத்தை 4-ம் பிரதிவாதிக்கு வாதி கொடுக்க தயாராக உள்ளார் என்றும், வழக்கு சொத்து சம்மந்தமாக வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் இடையே வாய்மொழி கிரைய உடன்படிக்கை நடைமுறையில் இருப்பதை வாதி கடந்த 26.11.2019-ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் 4-ம் பிரதிவாதி அறிந்த பிறகுதான் 18.12.2019-ல் 4-ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கிரையம் சட்டப்படி செல்லாது என்றும், மேலும், 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 18.12.2019-லிருந்து உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலதோஷ பாதிப்பும் கிடையாது என்றும், எனவே, வாய்மொழி கிரைய உடன்படிக்கை படி 1 முதல் 3 பிரதிவாதிகள் சுப்ரமணியத்தின் வாரிசுகள் என்ற முறையில் ஏற்றது ஆற்றுக விதி (Specific Performance) கொள்கையின் படி வழக்கு சொத்தை வாதியின் பேரில் கிரையம் எழுதி கொடுக்க கோரியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்க தவறும் பட்சத்தில் இந்நீதிமன்றமே 1 முதல் 3 பிரதிவாதிகள் சார்பில் வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் எழுதி பதிவு செய்து ஒப்புதல் கொடுக்க கோரியும், வாதி வழக்கு சொத்தை அனுபவிப்பதை 4-ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யா வண்ணம் 4-ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்து சம்மந்தமாக 4-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள வானூர் சார்பதிவக ஆவண எண்.6313/2019


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:48 +0530

கிரைய ஆவணமானது இல்லா நிலையது என அறிவிக்க கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

**<u>3. 4-ம் பிரதிவாதி தனக்காகவும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:-**

**3.1)** வழக்கு சொத்தை பொறுத்த வரையில் ஆதியில் சுப்ரமணி என்பவருக்கு பாத்தியமான சொத்து என்றும், மேற்படி சொத்தை சுப்ரமணி என்பவர் ஆண்டு அனுபவித்து வந்து அவரின் வாரிசு என்ற முறையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனம் பெற்று கொண்டு வழக்கு சொத்தை கடந்த 18.12.2019 அன்று 4-ம் பிரதிவாதி உமா (எ) உமாதேவி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், மேற்படி கிரையமானது வானூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.6313/2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி கிரையத்தின் படி 4-ம் பிரதிவாதி நாளது தேதி வரையில் கூரை வீடு கட்டி அதற்கு வீட்டு வரி ரசீதும், மின் இணைப்பும் பெற்று ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும், இந்த விபரம் வாதிக்கும், ஊரில் உள்ளவர்களுக்கும் தெரியும் என்றும், வாதி வழக்கு சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றும், மேலும், 1-ம் பிரதிவாதியின் கணவர் உடல்நிலை சரியில்லாத போது வாதியிடம் வழக்கு சொத்தை கிரையம் கேட்டார் என்பதும், பணம் கேட்டார் என்பதும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய் என்றும், 21.04.2010 அன்று வாதியிடம் 1-ம் பிரதிவாதியும் அவரது கணவரும் வாய்மொழியாக ரூ.60,000/- கிரையம் பேசி அன்றே ரூ.50,000/- பணத்தை முன்பணமாக வாதியிடம்


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:51 +0530

பெற்றுகொண்டதாக கூறியுள்ளது பொய் என்றும், வழக்கு சொத்தை வாதி சட்டத்திற்கு புறம்பாக அடைய முயன்று வருகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது.

**3.2**) கடந்த 18.12.2019 அன்று 4-ம் பிரதிவாதியின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் எண்.6313/2019 சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், அதனை இல்லா நிலையது என்று கோரியுள்ளது சட்டத்திற்கு புறம்பான ஒன்று என்றும், வாதிக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று தெரிந்தே வேண்டுமென்றே வழக்கு சொத்தை குறுக்கு வழியில் அடையவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான காரணங்களை கூறி வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொல்லப்பட்டுள்ளது.

**4. வாதியின் வழக்குரை, 1 முதல் 4 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை, ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக 29.06.2023-ம் தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| **1.** | **Whether the plaintiff and the deceased Subramaniyam entered into an oral sale agreement dated 21.04.2010 is true and binding over the defendant 1 to 3?** |
| **2.** | **Whether the defendant 1 to 3 has to execute the sale deed in favour of plaintiff under the plea of specific performance?** |
| **3.** | **Whether the plaintiff is entitled for permanent injunction against the 4th defendant?** |
| **4.** | **Whether the sale deed executed by the 1 to 3 defendant infavour of the 4th defendant dated 18.12.2019 is null and void?** |


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 17:59:55 +0530

| | |
|---|---|
| **5** | **Whether the plaintiff is entitled for declaration with regard to issue No.4?** |
| **6** | **To what other reliefs the plaintiffs is entitled for?** |

**5.** வாதி தரப்பில் வாதி ராஜேந்திரன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 3-ம் தரப்பினரான குமார் என்பவர் வா.சா.ஆ.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் 4-ம் பிரதிவாதி உமா என்பவர் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1-ம் பிரதிவாதி ராதாதேவி என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. ஆவணங்கள்**: -

**6.1)** 19.05.1998-ம் தேதியிட்ட காத்தவராயன் மகன் ராஜேந்திரன் என்பவர் ரங்கசாமி மகன் சுப்பரமணி என்பவருக்கு வழக்கு சொத்தை கிரையம் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.11.2019-ம் தேதியிட்ட ரங்கசாமி மகன் சுப்பரமணி என்பவரின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையல் R.சுப்பரமணி என்பவர் 02.10.2010-ல் சென்னை, வியாசர்பாடியில் காலமானதாக குறிப்பிட்டு இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. 29.11.2019-ம் தேதியில் வழக்கு சொத்தை கிரையம் எழுதி கொடுக்கவேண்டி வாதி தனது வழக்கறிஞர் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக ரசீதுகள் வா.சா.ஆ.4 ஆகவும், அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.2)** வா.சா.ஆ.1 ஆன கிரைய ஆவணத்தின் அசல் பிரதி பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு கடந்த 18.12.2019-ம் தேதியில் கிரையம் கொடுத்ததற்கான கிரைய ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.01.2020 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள மனைவரி தோராய பட்டா பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்திலிருந்து வழக்கு சொத்தில் தற்பொழுது வரை 4-ம் பிரதிவாதி தான் உடைமையில் இருந்து வருகிறார் என்று இந்நீதிமன்றத்தால் அறிய முடிகின்றது. 20.02.2020 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் நகல் பி.சா.ஆ.4 அக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை வழக்குவதற்கு கிராம நிர்வாக அலுவலருக்கு தனிப்பட்ட முறையில் சட்ட அதிகாரம் இல்லை என்பதால் மேற்படி ஆவணம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படுகிறது. 17.12.2021-ம் தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:03 +0530

**6.3)** 08.02.2025 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.12.2025 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.02.2025 தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசது பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.12.2025-ம் தேதியிட்ட 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசீது பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 13.04.2022-ம் தேதியிட்ட 4-ம் பிரதவாதி பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்பதால், வழக்கின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படுகின்றது. 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.446-002-275 என்ற எண்ணிற்கான மின் கட்டண அட்டை பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4-ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7.** வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8. எழுவினா 1, 2, 3-ற்கான தீர்வு: -**

**8.1)** வழக்கு சொத்தானது 1-ம் பிரதிவாதியின் கணவரான சுப்ரமணியன் என்பவருக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி உரிமையானது என்றும், மேற்படி வழக்கு சொத்தை ரூ.60,000/-ற்கு வாதி கிரையம் பெறுவதற்கு வாதியும் 1-ம் பிரதிவாதியின் கணவரான சுப்ரமணியன் என்பவரும் 21.04.2010-ம் தேதியில்

வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தி கொண்டுள்ளனர் என்றும், மேற்படி வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட அதே தேதியில் 1-ம் பிரதிவாதியிடமும், 1-ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியனிடமும் ரூ.50,000/- பணத்தை முன்பணமாக வாதியால் கொடுக்கப்பட்டது என்றும், அதன்பின்னிட்டு 02.05.2010-ல் மேற்படி சுப்ரமணியன் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் காலமாகிவிட்டார் என்றும், இறந்த சுப்ரமணியத்தின் வாரிசுகள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றும், 1-ம் பிரதிவாதியின் கணவருடன் ஏற்பட்ட வாய்மொழி கிரைய ஒப்பந்தத்தின் படி 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்காமல் வாரிசு சான்றிதழ் கிடைக்கவில்லை என்று காலம் கடத்தி வந்ததாகவும், பின்பு 01.06.2015-ல் வாதியானவர் 1-ம் பிரதிவாதியிடம் மீதி கிரைய தொகையான ரூ.10,000/- பணத்தை 1-ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து 2, 3 பிரதிவாதிகள் முன்னிலையில் கொடுத்தார் என்றும், மேற்படி மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு மேற்படி வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்காததால் வாதியானவர் 1-ம் பிரதிவாதிக்கு கடந்த 26.11.2019-ல் வழக்கறிஞர் அறிப்பை அனுப்பியுள்ளார் என்றும், அதன் பின்னிட்டு வழக்கு சொத்தை வாதிக்கு தெரியாமல் கடந்த 18.12.2019-ம் தேதியில் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும், வழக்கு சொத்தை வாதிக்கு கிரையம் எழுதி கொடுக்க ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். வாதியின் வழக்கை ஒத்துரைக்கும் வகையில் வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.



PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:11 +0530

**8.2)** மாறாக, வாதிக்கும் 1-ம் பிரதிவாதியின் கணவருக்கும் வாதி சொல்வது போல் வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்படவில்லை என்றும், எந்த கிரைய தொகையும் வாதி கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான பொருண்மை என்றும், வழக்கு சொத்தை 4-ம் பிரதிவாதி 18.12.2019-ம் தேதியில் ஆவண எண்.6313/2019-ன் படி 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், வழக்கு சொத்தின் மீது வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அதன் காரணமாக வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று பி.சா.1 மற்றும் பி.சா.2 ஆகியோரால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

**8.3)** பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், இ.ம.எண்.77/2020-ல் தாக்கல் செய்த எதிருரையை தான் எதிர் வழக்குரை என்று பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றும், எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்படாமலேயே இந்நீதிமன்றத்தால் எழுவினா தவறாக வனையப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதியின் கற்றறிந்த வழக்கறிஞரால் வாதங்களின் போது தெரிவிக்கப்பட்டது. வழக்கு கோப்பை பரிசீலனை செய்கையில், 4-ம் பிரதிவாதியானவர் கடந்த 08.12.2021-ம் தேதியில் "எதிர் வழக்குரை, Written Statement" என்று குறிப்பிட்டு தான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியவருகின்றது. மேற்படி எதிர் வழக்குரையில் இ.ம.எண்.77/2020 மனு என்று குறிப்பிட்டும் எதிர் வழக்குரையின் பொருண்மைகளில் தரப்பினர்களை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று

தெரியவருகிறது. மேலும், இ.ம.எண்.77/2020 மனுவை எடுத்து பரிசீலனை செய்கையில், மேற்படி மனுவில், வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை மேற்படி இடைநிலை மனுவின் ஆட்சேபணையாக கருதவேண்டுமென்று கோரி 08.12.2021-ம் தேதியில் பிரதிவாதிகள் தரப்பில் ஒரு குறிப்பானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இதிலிருந்து பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்து அதனை இ.ம.எண்.77/2020-ல் எதிருரையாக பாவிக்க வேண்டும் என்பதற்காக ஒரு குறிப்பு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, மேற்படி மனுவும் கடந்த 29.03.2023 அன்று முடித்து வைக்கப்பட்டுள்ளது. எதிர் வழக்குரையின் தலைப்பில் இ.ம.எண்.77/2020 என்று குறிப்பிட்டுள்ள ஒரே காரணத்திற்காக எதிர் வழக்குரையானது எதிருரை என்றும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று வாதி தரப்பில் எடுத்துரைப்பது வலுவற்ற வாதம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.4)** ஒரு ஆவணத்தின் தலைப்பை பார்க்காமல் அதனுள் கண்டுள்ள பொருண்மைகளை ஆராய்ந்து பார்த்து தான் முடிவு செய்யவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்ட நிலைப்பாடாகும். மேலும், 08.12.2021-ல் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் தலைப்பில் "எதிர் வழக்குரை, Written Statement" என்று குறிப்பிட்டுத் தான் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளனர். வாதிக்கு மேற்படி எதிர் வழக்குரை குறித்து ஆட்சேபணை இருந்திருந்தால் அதனை தாக்கல் செய்த 08.12.2021 அன்றோ அல்லது எழுவினா வனைந்த உடனேயோ இந்நீதிமன்றத்தில் ஆட்சேபணை தெரிவித்திருக்கலாம். ஆனால், அவ்வாறு வாதி தரப்பில் எந்த

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:19 +0530

ஆட்சேபணையும் தெரிவிக்காமல் வழக்கின் இறுதியில், வாதங்களின் போது தெரிவிப்பது ஏற்புடையதல்ல என்றும், மேற்படி வாதமானது வாதிக்கு எந்த பயனையும் அளிக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இதிலிருந்து பிரதிவாதிகள் தரப்பில் முறையாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் முறையாக எழுவினாக்கள் வனையப்பட்டு, அதன் பேரில் தான் இருதரப்பிலும் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.5)** எந்த உடன்படிக்கை எல்லாம் ஒப்பந்தம் என்று இந்திய ஒப்பந்த சட்டம், பிரிவு 10-ன் கீழ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***10. What agreements are contracts :-*** *All agreements are contracts if they are made by the free consent of parties competent to contract, for a lawful consideration and with a lawful object, and are not hereby expressly declared to be void. Nothing herein contained shall affect any law in force in [1][India] and not hereby expressly repealed by which any contract is required to be made in writing[2] or in the presence of witnesses, or any law relating to the registration of documents.*

வாய்மொழி கிரைய உடன்படிக்கை என்பது இந்திய சட்டங்களில் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாகும். ஆனால், மேற்படி வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டிய முழுமையான சுமை வாதியையே சாரும். வாதிக்கும், 1-ம் பிரதிவாதியின் கணவருக்கும் கடந்த 21.04.2010-ம் தேதியில் வழக்கு சொத்தை ரூ.60,000/-த்திற்கு கிரையம் பெறுவது என்று வாய்மொழி

கிரையம் பேசி முடிக்கப்பட்டது என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வாய்மொழி கிரைய உடன்படிக்கையின் கால அளவு எதுவரை என்றும், எந்த காலத்திற்குள் 1-ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்றும், கிரைய பத்திரம் மற்றும் பதிவு செலவினங்களை யார் ஏற்பது என்பது குறித்து எந்த பொருண்மையும் வாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. ஒரு வாய்மொழி கிரைய உடன்படிக்கையில் கிரைய சொத்தின் மறுபயன் தொகை, முன் பணம் மற்றும் பாக்கி தொகை செலுத்துவதற்கான கால நிர்ணயம், அதற்கான சாட்சிகள், பத்திரம் மற்றும் பத்திர செலவினங்கள் ஆகிய அனைத்தும் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கின் வாய்மொழி உடன்படிக்கையில், மேற்படி எவ்வித விவரங்களும் வாதி தரப்பில் தெரிவிக்கப்படாதது வாதி தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.6)** 1-ம் பிரதிவாதியின் கணவர் சுப்ரமணியன் என்பவரிடம் கிரைய முன் தொகையான ரூ.50,000/-த்தை அவரது மனைவியான 1-ம் பிரதிவாதி உடனிருக்கும்பொழுது கொடுத்ததாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருண்மையை பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. 21.04.2010-ம் தேதியில் 1-ம் பிரதிவாதியின் கணவரிடம் ரூ.50,000/-த்தை கொடுத்தாக சொல்வதை வாதி தரப்பில் உரிய சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், கடந்த 01.06.2015-ம் தேதியில் சென்னையில் 1-ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து பாக்கி கிரைய தொகையான ரூ.10,000/-த்தை 2, 3 பிரதிவாதிகளின் முன்னிலையில் 1-ம்

பிரதிவாதியிடம் கொடுத்ததாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பொருண்மையை பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. வா.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் 01.06.2015-ம் தேதியில் வாதியுடன் தானும் சென்னையில் உள்ள 1-ம் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றதாகவும், அன்றைய தினம் வழக்கு சொத்திற்கான வாய்மொழி கிரைய உடன்படிக்கையின் பாக்கி தொகையான ரூ.10,000/-த்தை 1-ம் பிரதிவாதியிடம் வாதி கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், சென்னைக்கு சென்று 1-ம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக தனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளது தவறு என்றும், மஞ்சக்குப்பம் கிராமத்தில் வைத்து தான் பணம் கொடுக்கப்பட்டது என்று முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2-ன் குறுக்கு விசாரணையின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு.

> *"எந்த இடத்தில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது என்றால் மஞ்சக்குப்பத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. சென்னைக்கு சென்று 1-ம் பிரதிவாதியிடம் வாதி பணம் கொடுத்ததாக என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான், சென்னையில் கொடுக்கவில்லை, மஞ்சக்குப்பத்தில் வைத்துதான் கொடுக்கப்பட்டது".*
>
> *என் பிரமாண பத்திரிக்கையில் ரூ.10,000/-த்தை சென்னைக்கு சென்று 1-ம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளது தவறு*



PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:32 +0530

*என்றால் சரிதான்".*

மேற்படி வா.சா.2-ன் சாட்சியமானது முதல் விசாரணைக்கும், குறுக்கு விசாரணைக்கும் முரணாக உள்ளதால் வா.சா.2-ன் சாட்சியம் நம்பக்கூடிய தன்மையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், 1-ம் பிரதிவாதியிடம் பாக்கி கிரைய தொகையான ரூ.10,000/-த்தை கடந்த 01.06.2015-ம் தேதியில் சென்னையில் வைத்து கொடுத்தபோது தன்னுடன் வா.சா.2 இருந்ததாக வழக்குரையில் எந்த பொருண்மையும் வாதியால் தெரிவிக்கவில்லை. மாறாக 2, 3 பிரதிவாதிகள் தான் உடனிருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 2, 3 பிரதிவாதிகளை வழக்கில் சாட்சியாக விசாரிப்பதற்கும் வாதி தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காதது வாதியின் வழக்கிற்கு பாதகமாகவே அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.7)** ஓர் ஏற்றதை ஆற்றுக பரிகார வழக்கில், கிரைய உடன்படிக்கை ஏற்பட்டதையும், கிரைய முன் தொகை கொடுத்ததையும், பாக்கி கிரையத்தொகையை செலுத்துவதற்கு வாதி தொடர்ந்து தயாராக இருந்தார் என்று வாதி தரப்பில் தகுந்த சாட்சியம் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். 21.04.2010-ம் தேதியில் வாதிக்கும் 1-ம் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே வழக்கு சொத்தை பொருத்து வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்பட்டு கிரைய முன்தொகையாக ரூ.50,000/- செலுத்தப்பட்டதாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், 02.05.2010-ல் 1-ம் பிரதிவாதியின் கணவர் காலமாகிவிட்டதாகவும், வாதி தரப்பில்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:36 +0530

தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தை வாதியின் பெயருக்கு கிரையம் எழுதி கொடுக்கவேண்டி வாதியானவர் கடந்த 29.11.2019-ம் தேதியில் வா.சா.ஆ.3 ஆன வழக்கறிஞர் அறிவிப்பை 1-ம் பிரதிவாதிக்கு அனுப்பியதாக சொல்லப்பட்டுள்ளது. 02.05.2010-ல் 1-ம் பிரதிவாதியின் கணவர் காலமான பிறகு சுமார் 9 வருடங்களாக வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு வாதி தரப்பில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காததற்கு எந்தவிதமான நியாயமான விளக்கத்தையும் அளிக்காதது வாதி தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.8)** வாய்மொழி கிரைய உடன்படிக்கையின் காலம் எவ்வளவு என்று வாதி தரப்பில் குறிப்பிட்டிருந்தால் தான் வாய்மொழி கிரைய உடன்படிக்கையானது 9 வருடங்கள் கழித்து நிறைவேற்ற கூடியதா என்று இந்நீதிமன்றத்தால் அறிய முடிந்திருக்கும். வாய்மொழி கிரைய உடன்படிக்கையின் கால அவகாசத்தை வாதி தரப்பில் தெரிவிக்காதது மேற்படி வாய்மொழி கிரைய உடன்படிக்கையானது முழுமையான உடன்படிக்கை அல்ல என்றும், மேற்படி வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்பட்டதை வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**8.9)** பி.சா.ஆ.3 ஆவணமான பட்டாவை பரிசீலனை செய்கையில், வழக்கு சொத்திற்கான பட்டா 4-ம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்டு வழக்கு சொத்தானது 4-ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகின்றது என்று தெரியவருகின்றது. மேலும், வழக்கு சொத்தை தற்பொழுது வரை 4-ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்று வா.சா.1 தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1-ன் சாட்சியத்தின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு.


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:40 +0530

> *"தாவா சொத்தை 4-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 4-ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்".*

இதிலிருந்து வழக்கு சொத்தில், வாதியானவர் அனுபவத்தில் இல்லையென்றும், 4-ம் பிரதிவாதி தான் அனுபவத்தில் இருந்து வருகின்றார் என்று தெளிவாக தெரியவருகின்றது. வழக்கு சொத்தில் வாதி உடைமையில் இல்லாததால் 4-ம் பிரதிவாதிக்கு எதிராக கோரிய நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**8.10)** வாதிக்கும் 1-ம் பிரதிவாதியின் கணவரான இறந்துபோன சுப்பரமணியன் என்பவருக்கும் கடந்த 21.04.2010-ம் தேதியில் வழக்கு சொத்தை பொருத்து வாய்மொழி கிரைய உடன்படிக்கை ஏற்பட்டதையும், கிரையத்தொகையான ரூ.60,000/- பணத்தை வாதி செலுத்தியதையும், வாதி தரப்பில் நிரூபிக்காததால் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதிக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுக்க வேண்டிய சட்ட கடமை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா 1, 2 மற்றும் 3-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**9. எழுவினா 4, 5-ற்கான தீர்வு : -**

**9.1)** வழக்கு சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் பி.சா.ஆ.2 ஆவணத்தின் படி 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளதாக இருதரப்பிலும்


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:45 +0530

ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு முறையாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் படி கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று தெரியவருகிறது. 1 முதல் 3 பிரதிவாதிகளானவர்கள், வழக்கு சொத்தை பொருத்து வாதிக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுப்பதற்கு சட்டக் கடமை இல்லை என்று எழுவினா 1 முதல் 3-ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை பொருத்து, 18.12.2019-ம் தேதியில் 4-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை (ஆவண எண்.6313/2019) இல்லா நிலையது என்று விளம்ப கோரிய பரிகாரமும், வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா 4 மற்றும் 5-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**10. எழுவினா 6-ற்கான தீர்வு** :-

எழுவினா 1 முதல் 5-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 6-ற்கு தீர்வு காணப்படுகிறது.

**11. முடிவில், வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை

நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:53 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**: -

வா.சா.1 :- ராஜேந்திரன் (வாதி)

வா.சா.2 :- குமார் (3-ம் தரப்பினர்)

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : -**

பி.சா.1 :- உமா (4-ம் பிரதிவாதி)

பி.சா.2 :- ராதாதேவி (1-ம் பிரதிவாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்: -**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.05.1998 | காத்தவராயன் மகன் ராஜேந்திரன் என்பவர் ரங்கசாமி மகன் சுப்பரமணி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 28.11.2019 | ரங்கசாமி மகன் சுப்பரமணி என்பவரின் இறப்புச் சான்றிதழ். | - கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 29.11.2019 | வாதி 1-ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு. | - அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 30.11.2019 | வாதியின் வழக்கறிஞர் 1-ம் பிரதிவாதி மற்றும் இரு நபர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக ரசீதுகள். | - அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | 03.12.2019<br>04.12.2019 | வழக்கறிஞர் அறிவிப்பை 1-ம் பிரதிவாதி மற்றும் இருநபர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள். | - அசல் |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு சாண்றாவணங்கள்: -**

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 19.05.1998 | காத்தவராயன் மகன் ராஜேந்திரன் என்பவர் ரங்கசாமி மகன் சுப்பரமணி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | - அசல் |
| பி.சா.ஆ.2 | 18.12.2019 | 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரையம் ஆவணம். | - அசல் |
| பி.சா.ஆ.3 | 29.01.2020 | வழக்கு சொத்திற்கு 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள மனைவரி தோராய பட்டா. | - உண்மை நகல் |
| பி.சா.ஆ.4 | 20.02.2020 | வழக்கு சொத்திற்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல். | - உண்மை நகல் |
| பி.சா.ஆ.5 | 17.02.2021 | 4-ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது. | - அசல் |
| பி.சா.ஆ.6 | 08.02.2025 | 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது | - கணிணி நகல் |
| பி.சா.ஆ.7 | 08.12.2025 | 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது. | - கணிணி நகல் |
| பி.சா.ஆ.8 | 08.02.2025 | 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசது. | - கணிணி நகல் |
| பி.சா.ஆ.9 | 08.12.2025 | 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசீது. | - கணிணி நகல். |
| பி.சா.ஆ.10 | 13.04.2022 | 4-ம் பிரதவாதி பெயரில் செலுத்தப்பட்ட மின் | -கணிணி |


PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:00:59 +0530

| | | | |
|---|---|---|---|
| | | கட்டண ரசீது. | நகல். |
| பி.சா.ஆ.11 | ---- | மின் இணைப்பு எண்.446-002-275 என்ற எண் கொண்ட 4-ம் பிரதிவாதி பெயரிலுள்ள மின் கட்டண அட்டை. | - அசல் |
| பி.சா.ஆ.12 | ---- | 4-ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை. | - நகல். |

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.07.31 18:01:04 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**